**துணை ஆணையர்(மாவ), சரகம்-XI அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை - திரு. குறிஞ்சி செல்வன், வே.செ., எம்.எஸ்ஸி(வேளாண்மை),எம்.பி.ஏ.,**
**இடம் - 2ம் தளம், பேரறிஞர் அண்ணா பவள விழா நினைவுக் கட்டிடங்கள்,**
**கிரிம்ஸ் சாலை, சென்னை 600 006.**

---

செ.மு.ந.க. 2770 /2017/ அ1 நாள் 06.12.2018

பொருள்- பொதுப்பணிகள் - வணிகவரித்துறை - நேரடி பணி நியமனம் - தமிழ்நாடு அமைச்சுப் பணிகள் அரசு பணியாளர் தேர்வாணையம் தொகுதி - IV / 2015-16 - துணை ஆணையர்(மாவ), சரகம்- XI, அலுவலகத்தில் பணிபுரியும் - திருமதி. அ. ஆனந்தி, தட்டச்சர்-பதவியில் - பணிவரன்முறை - ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், அவர்களின் கடித எண்.5658/PSD-A2/2017, நாள் 03.10.2017.
2. இணை ஆணையர்(மாவ), சென்னை (தெற்கு) கோட்டம், சென்னை-6 அவர்களின் செயல்முறைகள் ந.க.5395/2017/அ2, நாள் 17.10.2017.
3. துணை ஆணையர்(மாவ), சரகம் XI சென்னை-6 அவர்களின் செயல்முறைகள் ந.க.2770/2017/அ1, நாள் 14.11.2017.

*******

**ஆணை :**

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் தொகுதி -IV / 2015-16 தேர்வு மூலம் தேர்வு செய்யப்பட்டு தற்போது துணை ஆணையர்(மாவ), சரகம்- XI, அலுவலகத்தில் பணிபுரியும் **திருமதி.அ.ஆனந்தி,** தட்டச்சர் என்பவருக்கு அவர் பணியில் சேர்ந்த நாளான 20.11.2017 முற்பகல் முதல் தட்டச்சர் பணி நிலையில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

பணிவரன்முறை செய்யப்பட்ட நாளில் இருந்து மூன்றாண்டுகளுக்குட்பட்ட தொடர்ச்சியான ஈராண்டு காலம் தகுதிகாண் பருவ காலமாக நிர்ணயிக்கப்படுகிறது. இக்காலத்தில் இவர்கள் கணினி பயிற்சி (Office Automation) மற்றும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

இந்த பணிவரன்முறை ஆணையானது இப்பதவிகள் தொடர்பான 2015-16 சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதி மன்றத்தின் மதுரை கிளையில் நிலுவையிலுள்ள நீதிப்பேராணை மீதான தீர்ப்பின் முடிவுக்குட்பட்டது.

ஒம்/- குறிஞ்சி செல்வன் வே.செ,
துணை ஆணையர்(மாவ),
சரகம்- XI , சென்னை-6.

பெறுநர்
**திருமதி. அ. ஆனந்தி,**
தட்டச்சர்,
துணை ஆணையர்(மாவ), சரகம்-XI

**நகல்**
1.இணை ஆணையர்(மாவ), சென்னை (தெற்கு) கோட்டம் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது
2. பணியாளர் தொகுப்பு கட்டு
3 .உதிரி-1.

//உண்மை நகல்//

மேலாளர் 6.12.18